26

# மனித உரிமை

இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் வழி காட்டுகிற ஒரு மார்க்கமாகும். ஆதலால் அது மனிதனின் தனிப்பட்ட, குடும்ப, சமூக வாழ்வு தொடர்பான அனைத்துத் துறைகளுக்குமான நியதிகளையும், சட்டதிட்டங்களையும் வகுத்துத் தந்துள்ளது.

மனிதன், மனிதனாக வாழ்வதற்குக் கடமைகள் நிறைவேற்றப்படுவதும் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதும் அவசியமாகும். அல்லாஹ்வின் சிரேஷ்ட படைப்பு என்ற வகையில் எல்லா மனிதர்களும் சமமானவர்கள். எந்தக் காலத்தில் எந்த சூழலில் வாழ்பவராக இருந்தாலும் எந்த நாட்டை, இனத்தை, அரசியல், சமூக, பொருளாதார கல்வி நிலையைக் கொண்டவராக இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் பொதுவான கடமைகளும், உரிமைகளும் உள்ளன. அவற்றை வகுத்தும், வழங்கியும் வருபவன் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனே. ஏனெனில் அவனால் மட்டுமே எல்லோருக்கும் பொதுவான, சமநிலையான, பாகுபாடற்ற கடமைகளையும் உரிமைகளையும் காட்டிக் கொடுக்க முடியும்.

எனவேதான் இஸ்லாம், மனித உரிமைகளை அல்குர்ஆனிலிருந்தும், ஸுன்னாவிலிருந்தும் பெற்றுக்கொள்கிறது. அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ள



உரிமைகள் பிறப்புரிமைகளாகும். ஆதலால் அவற்றை எவரும் மறுக்க முடியாது பறிக்க முடியாது; துஷ்பிரயோகம் செய்யவும் முடியாது. அவ்வாறு செய்பவர்கள் பெருந் துரோகிகள் மட்டுமல்லர். அல்லாஹ்வின் தண்டனைக்குரியவர்களுமாவர்.

அல்லாஹ் வழங்கியுள்ள உரிமைகள், மனிதன் வகுத்துக் கொடுக்கும் உரிமைகள் போல பலவீனமானவையல்ல. மனிதன் உருவாக்கிக் கொடுத்த உரிமைகள் காலத்தால், இடத்தால் வேறுபடுபவை; கொடுக்கப்படுவது போல பறிக்கப்படுபவை; ஏட்டளவில் இருப்பவை; செயல்படாதவை; அதிகார பலத்தாலோ, வேறு வகையாலோ மறுக்கப்படுபவை; பல்வேறு காரணங்களால் காலாவதியாகுபவை. இவ்வாறான நிலைகளால் மனித இன சமத்துவம் பாதிக்கப்படுகின்றது. ஒரு காலத்தில், ஒரு பிரதேசத்தில் வாழ்ந்த, வாழுகின்ற மக்கள் அனுபவித்த உரிமைகள், மற்றொரு காலத்தில் அல்லது பிரதேசத்தில் வாழ்ந்த மக்களுக்கு கிடைக்காமலும் போகலாம். நவீன உலகம் வகுத்துத் தந்துள்ள உரிமைகளில் இவ்வாறான குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றை வகுத்துத் தந்த மேற்குலகம் சிந்திப்பதற்கு, ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பே, இஸ்லாம் மனித உரிமைகளாகப் பிரகடனப்படுத்தியது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவுக்குக் குடிபெயர்ந்த - ஹிஜ்ரத் செய்த புதிதில் அங்கு வாழ்ந்த மக்களோடு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை மதீனா சாசனம் எனப்படுகின்றது.

இதற்கு ஆறு நூற்றாண்டுகளுக்குப் பின் 1215 இல் தான் மகா சாசனம் ‘சுமக்னா காட்டா’ எனும் பெயரில் இங்கிலாந்தில் சார் மன்னனுக்கும் மக்களுக்குமிடையிலான உடன்படிக்கை நிகழ்ந்திருக்கின்றது. எனினும் காலப்போக்கில் அதில் பல மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் இஸ்லாம் வழங்கியுள்ள உரிமைகள் நிரந்தரமானவை. மனித இயல்போடு பொருந்தியவை. தொடர்ச்சியாக செயல்படுபவை. எவராலும் பறிக்க முடியாதவை. அவற்றை வழங்க மறுப்பது சட்டவிரோதமானது மட்டுமல்ல. பாவமானது; தண்டனைக்குரியது.

இது பற்றி முன்னாள் நீதியரசர் கலாநிதி சீ.வி. வீரமந்திரி, இஸ்லாமிய சட்டவியல் ஒரு சர்வதேசப் பார்வை என்ற தனது நூலில் புதியதொரு கோணத்தில் விளக்கம் தருகிறார். இன்றைய சர்வதேச சாசனங்கள் எதனையும் கருத்திற்கொள்ளாது, இஸ்லாமிய சட்ட இலக்கியத்தை மாத்திரம் ஆராய்ந்து, அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமைகளைப் பொறுக்கி சர்வதேச இஸ்லாமிய மனித உரிமைப் பிரகடனம் என்ற ஒரு சாசனத்தை அமைக்கலாம். அப்படி ஒன்று அமைக்கப்பட்டால் அது இன்றைய மனித உரிமை சாசனத்துக்கு ஒப்பானதாகவே இருக்கும்.

## இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகளில் சில...

### 1. உயிர் வாழ்வதற்கான உரிமை

மனித உயிர் புனிதமானது. அது பாதுகாக்கப்பட வேண்டியது. ஆதலால் ஒவ்வொரு மனிதனும் எத்தகைய தலையீடுமின்றி உலகில் உயிர்வாழும் உரிமையைப் பெற்றுள்ளான்.

அல்லாஹ் புனிதமாக்கிய உயிரை முறையான நீதி விசாரணையின்றிக் கொல்லாதீர்கள் (6: 151) என்றும், எவனொருவன் ஓர் உயிரை (அநியாயமாக) கொலை செய்கிறானோ,

அவன் மனிதர்கள் அனைவரையுமே கொலை செய்தவன் போலாவான். அன்றி, எவன் ஓர் ஆத்மாவை வாழ வைக்கின்றானோ அவன் மனிதர்கள் அனைவரையும் வாழ வைத்தவன் போலாவான் (5:32) என்றும் அல்குர்ஆன் கூறுகின்றது.

### 2. சமத்துவத்துக்கான உரிமை

மனிதர்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமமானவர்கள். இனம், இடம், நிறம், தோற்றம் போன்றவற்றால் வேறுபடுத்த முடியாதவர்கள்.

மனிதர்களே உங்களது இரட்சகன் ஒருவனே. அறிந்து கொள்ளுங்கள். அறபிகள் அறபிகளல்லாதவர்களை விடவோ, வெள்ளை நிறத்தவர், கறுப்பு நிறத்தவர்களை விடவோ மேம்பட்டவர்களல்லர். இறையச்சத்தின் மூலமாகவே நீங்கள் உயர்ந்தவர்களாக கணிக்கப்படுவீர்கள் (பைஹகீ) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

### 3. தனி மனித சுதந்திரத்துக்கான உரிமை

'மூன்று வகை மனிதர்களுக்கு எதிராக நான் மறுமையில் வாதாடுவேன். அவர்களில் ஒரு வகையினர், மனிதர்களை அடிமைப்படுத்தி அவர்களை விற்று அந்தப் பணத்தில் சாப்பிடுபவர்' (புஹாரி)

இதனால்தான், இஸ்லாம் அடிமை விடுதலையை ஊக்குவிக்கின்றது. அடிமை வியாபாரத்தைத் தடை செய்கின்றது.

'மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை. (ஏனென்றால்) வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகிவிட்டது' (2:256) என்று அல்குர்ஆன் குறிப்பிடுவது, தனி மனிதன் தான் விரும்பிய சமயத்தைப் பின்பற்ற முடியுமென்ற சமய சுதந்திரத்தை எடுத்துக் காட்டுகின்றது.

### 4. நீதி பெறுவதற்கான உரிமை

ஒவ்வொரு தனிமனிதனும் சட்டத்துக்கு முன் சமமாக நிறுத்தப்படுவதற்கும், சம நீதியைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிமை பெற்றிருக்கின்றான்.

'நம்பிக்கையாளர்களே அல்லாஹ்வுக்காக நீதமாக (உண்மையான) சாட்சி சொல்பவர்களாகவே இருங்கள். ஒரு வகுப்பார் மீது உங்களுக்குள்ள துவேஷம் அவர்களுக்கு அநியாயம் செய்யும்படி உங்களைத் தூண்டாதிருக்கட்டும். (எவ்வளவு குரோதம் இருந்த போதிலும்) நீங்கள் நீதியே செலுத்துங்கள். அதுதான் பரிசுத்தத் தன்மைக்கு மிக நெருங்கியது' (5:8)

எனது மகள் பாத்திமா களவெடுத்தாலும் அவரது கையைத் துண்டிக்க தயங்க மாட்டேன் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

### 5. கண்ணியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவனது மதிப்பை, கண்ணியத்தைக் கெடுக்கும் நடவடிக்கைகளில் இருந்தும், அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளில் இருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கான உத்தரவாதத்தை அல்குர்ஆன் உறுதிபடுத்துகின்றது.

நம்பிக்கையாளர்களே அநேகமான சந்தேகங்களில் இருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். ஏனென்றால் நிச்சயமாக சந்தேகங்களில் சில, பாவமானவைகளாக இருக்கின்றன. (எவருடைய குற்றத்தையும்) நீங்கள் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருக்க வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றவர் பற்றி புறம் பேச வேண்டாம் *(49:12)*

### 6. சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான உரிமை

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பெறுகின்ற உரிமை வழங்கப்பட்டுள்ளது.

‘ஆண்கள் சம்பாதித்தவை ஆண்களுக்கே உரியன. (அவ்வாறே) பெண்கள் சம்பாதித்தவை பெண்களுக்குரியனவே’ *(4:32)*

### 7. மத உணர்வுகளுக்குப் பாதுகாப்பு வழங்கும் உரிமை

‘(விசுவாசிகளே) அல்லாஹ் அல்லாத எவற்றை அவர்கள் (இறைவன் என) அழைக்கிறார்களோ, அவற்றை நீங்கள் திட்டாதீர்கள். அதனால் அவர்கள் அறியாமை காரணமாக வரம்பு மீறி அல்லாஹ்வைத் திட்டுவார்கள். இவ்வாறே ஒவ்வொரு வகுப்பாருக்கும் அவர்களுடைய செயலை நாம் அழகாக்கி வைத்திருக்கின்றோம். பின்னர் அவர்கள் தங்கள் இறைவனிடமே செல்வார்கள். அவர்கள் செய்து கொண்டிருந்ததைப் பற்றி அவன் அவர்களுக்கு அறிவித்து விடுவான்’ (6:108)

இங்கு இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் சிலவற்றை மாத்திரம் எடுத்துக்காட்டியுள்ளோம். இஸ்லாத்தின் மனித உரிமைகள் என்ற பகுதி மிக விரிவானது. தனி மனிதன் முதல் சமூக வாழ்வின் அனைத்து துறைகளையும் உள்ளடக்கியதாக அவை பிணைந்துள்ளன. அவற்றை நீங்கள் உயர் வகுப்புகளில் தொடர்ந்து படிக்கலாம்.

**பயிற்சி**

1. கடமை, உரிமை என்பதை வேறுபடுத்திக்காட்டுக.
2. மனித உரிமைகள் அல்லாஹ்வினால் வகுக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் யாவை?
3. மனிதன் வகுக்கின்ற உரிமைகள் பலவீனமானவை எனப்படுவது ஏன்?
4. மனித உரிமைப் பிரகடங்கள் இரண்டை சுட்டிக்காட்டி, அவற்றின் தோற்றத்தை சுருக்கமாக எடுத்துக்காட்டுக.
6. இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் இரண்டை சுட்டிக்காட்டி அவற்றின் சிறப்பை எடுத்துக்காட்டுக.